பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை 24.11.2023 அதிர்வு 116

## கஞ்சா மூடைகளுடன் தப்பிய மன்னார் படகு

(ந.லோகதயாளன்)




இந்தியாவின் தூத்துக்குடி அருகே இந்தியப் படகில் இருந்து இலங்கை மன்னார் படகுக்கு கஞ்சா 04 ▶

# கைதி அலெக்ஸ் சாவு மனித உயிர்ப் போக்கு



## மூன்று பொலிஸாரைக் கைது செய்ய உத்தரவு

## ஏனையோரைப் பிடிக்க அடையாள அணிவகுப்பு




(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு உயிரிழந்த கைதி நாகராசா அலெக்ஸின் (வயது 26) மரணம் இயற்கையானது அல்ல, அது மனித உயிர்ப் போக்கு (Homicide) என அறிவித்த யாழ்ப்பாணம் நீதிவான், உயிரிழந்த நபருடன் கைதான மற்றையவர் அளித்துள்ள சாட்சியத்தில் பெயர் குறிப்பிட்டு அடையாளம் கூறிய மூன்று பொலிஸாரையும் கைது செய்யுமாறும், 04 ▶

## கல்முனை வடக்கு பிரதேச செயலக வழக்கை விசாரணைக்கு ஏற்க முடிவு




தமிழர்கள் அதிகமாக வசிக்கும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி அறிவிக்கும்படி கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு ஏற்பது என மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று முடிவு செய்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் பந்துல கருணாரத்தின, நீதியரசர் சமத் மொறாயஸ் ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த முடிவை இன்று அறிவித்தது.

அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் ஜனாதிபதியின் அனுமதி 04 ▶

## அராலியில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி இன்று அறுப்பு

### தகவல் வழங்க மறுத்த வட்டுக்கோட்டை பொலிஸார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலியில் வைத்து பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி ஒன்று இன்று அறுக்கப்பட்டது.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது இவ்வாறு சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. 04 ▶

## வவுனியாவில் பாரவூர்தி மோதி வயோதிபர் பரிதாப உயிரிழப்பு



(கே.வசந்தரூபன்)

வவுனியா நகரப் பகுதியில் சைக்கிளுடன் பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகர பள்ளிவாசலின் முன்பாக 04 ▶

# கல்லூரியில் ஏழு மாணவர்களை 'லஞ்ச் ஷீட்' சாப்பிட வைத்த அதிபர்



### இருவர் வைத்தியசாலையில் நாவலப்பிட்டியில் கொடூரம்

(ரி.பெருமாள்)

மதிய உணவை லஞ்ச் ஷீட்டில் சுற்றிக் கொண்டு வந்த மாணவர்களில் ஏழு பேரைப் பிடித்த பாடசாலையின் அதிபர், அந்த லஞ்ச் ஷீட்டை உட்கொள்ளுமாறு கூறியமையால், அதனை உட்கொண்ட இரண்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம், நாவலப்பிட்டி வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் கல்லூரி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

பாதிப்புக்குள்ளான மாணவர்கள் இருவரும் நாவலப்பிட்டி மாவட்ட பொது ஆதார வைத்தியசாலையில் 04 ▶

### தமிழ்க் கூட்டமைப்பைப் பற்றி பேசுவதற்கு முன்னர்

# சரத் வீரசேகர ராணுவ சிந்தனையிலிருந்து ஜனநாயக சிந்தனைக்கு வர வேண்டும்!

### ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் கண்டிப்பு

(நூருல் ஹுதா உமர்)

விடுதலை புலிகளின் பயங்கரவாதத்தை அழித்தவுடனேயே அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தடை செய்யாதது தவறு என்றும் அதற்காகத் தான் வருந்துகிறார் என்றும் முன்னாள் பொலிஸ் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் கூறியதை வன்மையாக கண்டிக்கிறேன்.

இப்படியான இனவாத சிந்தனை கொண்டோர்களின் நச்சுக் கருத்துக்களும், இனவாத செயற்பாடுகளுமே இலங்கையில் 75 ஆண்டுகளுக்கு மேலாக இனப் பிரச்சினையை தீர்க்க முடியாதுள்ளது போனமைக்குக் காரணமாக உள்ளன.

இராணுவ சிந்தனையில் இருந்து ஜனநாயக சிந்தனைக்கு சரத் வீரசேகர வர வேண்டும்.

ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

சுலபமாகப் பேசித் தீர்க்க வேண்டிய இன நெருக்கடிகளை பயங்கரவாதமாக மாற்றுவதற்குச் சிலர் எடுக்கும் எத்தனங்களை எண்ணி இலங்கையர்கள் என்ற வகையில் நாம் வருத்தப்பட வேண்டும்.

அத்துடன், தெற்கின் அரசியல் அதிகாரத்தை தென்னிலங்கை இளைஞர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்காமல் அதனை கிளர்ச்சியாகப் பெரிதாக்குவதற்காக நாம் வெட்கப்பட வேண்டும்.

எனவே இப்படியான செயல்களாலும், எண்ணங்களாலும் இலங்கையர்கள் ஆகிய நாம் இன்று பல்வேறு துறைகளில் பின் தங்கியுள்ளோம்.




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அதிகாரத்தில் இருந்த சரத் வீரசேகர சிங்கள, தமிழ், முஸ்லிம், சமூகத்தினரிடையே இருந்த கடும்போக்குவாத சிந்தனைகளை தடை செய்திருக்க வேண்டும்.

ஆனால் மாற்றமாக அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரசியல் தேவைகளுக்காகச் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகம் மத்தியில் தமக்கு அரசியல் இலாபம் கிடைக்க வேண்டி கடும்போக்குவாத சிந்தனைகளைத் தலைதூக்க அனுமதித்ததுடன் அதனை வளர்த்தும் விட்டனர்.

கருணா அம்மான், பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா போன்ற, அவர்களுக்கு ஆதரவானவர்கள் கூட கேட்கும் அரசியல் தீர்வை வழங்குவதற்குப் பதிலாகத் தமிழ்ச் சமூகத்தினரிடையே அரசியல் கருத்தியல் மோதல்களை அதிகப்படுத்தி காலத்தை வீணடித்துள்ளனர் என்பதே உண்மை.

அத்துடன் ரவூப் ஹக்கீம், றிசாத், அதாவுல்லா, ஹிஸ்புல்லாஹ் போன்றவர்களைக் கொண்டு முஸ்லிம் சமூகத்துக்குள்ளும் பிரிவினை வாதத்தை உண்டாக்கி தீர்வை நோக்கி நகரவிடாமல் தடுத்துள்ளனர். அதற்கு மேல் ஒரு படிசென்று முஸ்லிம் – தமிழ் சமூகங்களுக்கு இடையில் அரசியல் பிளவுகளை ஏற்படுத்தினர்.

இதனாலேயே பிற சமூகங்களில் இருந்து கடும்போக்குவாத சிந்தனையாளர்களும், கிளர்ச்சியாளர்களும் பிறந்ததைப் போன்று முஸ்லிம் சமூகத்தினரிடையேயும் பிறந்தனர்.

அத்துடன், 69 லட்சம் வாக்குகளின் மூலம் கடந்த காலங்களில் அதிகாரத்தை கைப்பற்றிய சரத் வீரசேகர ஆதரவளித்த அரசு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, நாடாளுமன்ற பாதுகாப்பு தெரிவுக்குழு அறிக்கை, ஈஸ்டர் தெரிவுக்குழு அறிக்கை போன்றவற்றின் சிபாரிசுகளை சட்டரீதியாக அமுல்படுத்த முதுகெலும்பு இல்லாதது தீவிரவாதத்தை நோக்கிய இவர்களது திராணியற்ற கொள்கையை உணர்த்தியது.

எனவே, ஜனநாயக நீரோட்டத்தில் சித்தாந்த ரீதியாக போராடும் அரசியல் அமைப்புக்களையும், கட்சிகளையும் அடக்கி அல்லது தடை செய்வதன் மூலம், இவ்வாறான இயலாமையை வெளிப்படுத்திய சரத் வீரசேகர மேலும் பிரிவினைவாத சித்தாந்தங்களை வலுப்படுத்தி தீவிரவாத பயங்கரவாதத்திற்கான பாதையை மீண்டும் திறக்கலாம் என்று எண்ணுகிறார்கள்.

நாம் எல்லோரும் ஒன்றிணைந்து அரசியலில் அதிகார இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் இலங்கையின் அமைவிடம் காரணமாக பூகோள அரசியல் உந்து சக்தியாக அமைந்து சர்வதேசம் தலையீடு செய்து இன நெருக்கடியை இன்னும் வலுப்படுத்த கூடிய வாய்ப்புக்கள் உள்ளது.

இதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் இலங்கைத் தேசமாகிய நாம் ஒன்று கூடி 100 ஆவது சுதந்திரத்துக்கு முன்னர் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு நல்லிணக்கத்துடன் அபிவிருத்தி செய்து ஆசியாவில் வல்லரசாக மாற வழி வகுக்க வேண்டும்.– என்றுள்ளது.

# கோப்பாய், நெல்லியடி 'சிக்னல்'கள் செயலிழப்பு!

யாழ்ப்பாணம் கோப்பாய் சந்தி மற்றும் நெல்லியடி ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குக்கான செக்கன் மணிகூடு (இரண்டு வாரங்களுக்கு மேராகப் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இதனால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. சந்திகளில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கோப்பாய் சந்தியில் நான்கு சமிக்ஞை விளக்கு தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதில் கோப்பாய் சந்தியில் இருந்து யாழ். நகர பக்கமாகவும் மற்றையது யாழ். நகர பக்கத்தில் இருந்து கோப்பாய் சந்திப் பக்கமாகவும் உள்ள இரண்டு சமிக்ஞை தொகுதிகளின் செக்கன் மணிக்கூடுகள் இவ்வாறு பழுதடைந்த நிலையில் உள்ளன.



இதனால் வாகனச் சாரதிகள் சமிக்ஞை விளக்குகள் செயற்படுகின்றனவா இல்லையா என்ற சந்தேகத்தில் வீதியை கடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து கோப்பாய், நெல்லியடிப் பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

# சவுதி தூதர் - ஹக்கீம் சந்திப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம், இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதர் காலித் பின் ஹமுத் அல்கஹ்தானியை சவுதி அரேபியத் தூதரகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது சர்வதேச மற்றும் தேசிய அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# கல்முனை வைத்தியசாலையில் அவசர உயிர்காப்புப் பயிற்சி நெறி!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் இலங்கையின் அதி தீவிர சிகிச்சை மற்றும் மயக்க மருந்து வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் சுகாதார உதவியாளர்களுக்கான அவசர உயிர் காப்புச் செயன்முறை பயிற்சி பட்டறையானது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர்.இரா. முரளீஸ்வரன், மயக்க மருந்து வைத்திய நிபுணர் டாக்டர் கே. சுதேஸ்வரி, வைத்திய அதிகாரிகள், இலங்கையின் அதி தீவிர சிகிச்சை மற்றும் மயக்க மருந்து வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள், வைத்தியசாலை சிற்றூழிய மேற்பார்வையாளர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

மயக்க மருந்து வைத்திய நிபுணர் டாக்டர் கே. சுதேஸ்வரி மற்றும் அவருடைய வைத்திய உத்தியோகத்தர்கள் குழுவினரும் இணைந்து செயற்கை மனித உடல் மாதிரிகளைப் பயன்படுத்திச் செயன்முறை விளக்கங்களை வழங்கினர்.



# வீதிப் போக்குவரத்துத் தொடர்பில் சிறாருக்கு விழிப்புணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வீதி விபத்துக்கள் அதிகரித்துவரும் இந்தக் கால கட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு சம்பந்தமான விழிப்பூட்டலை ஏற்படுத்துவது அனைவரினதும் பாரிய பொறுப்பாகும்.

அந்த வகையில் அனுராதபுரம் பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் பங்களிப்புடன் அனுராதபுரம் லைசியம் சர்வதேச கல்லூரி மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து விதிகள் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கல்லூரியில்...

சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்கள் மதிய உணவை லஞ்ச் ஷீட்டில் சுற்றி, செய்தித்தாளில் சுற்றிக்கொண்டு வந்துள்ளனர்.

அந்த வகுப்பில் 33 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதில் 7 மாணவர்கள் பகல் உணவுகளை லஞ்ச் ஷீட்டில் சுற்றி, செய்தித்தாள் மூலம் சுற்றிக் கொண்டு வந்துள்ளனர்.

மதியம் சாப்பிட்டுவிட்டு லஞ்ச் ஷீட் மற்றும் செய்தித்தாள் பக்கங்களை ஏழு மாணவர்களும் தங்களுடைய வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்குத் தயாராகி கொண்டிருந்துள்ளனர்.

அப்போது அவ்விடத்துக்கு வந்த அதிபர் அவற்றை வெளியே எடுத்து சாப்பிடுமாறு கூறியுள்ளார். அவர்கள் அனைவரும் லஞ்ச் ஷீட் மற்றும் செய்தித் தாள்களைத் தின்று விட்டனர்.

லஞ்ச் ஷீட்டில் மற்றும் செய்தித்தாள் களை சாப்பிட்ட ஏழு மாணவர்களில் ஒருவர் 21 ஆம் திகதியும், மற்றுமொரு மாணவன் 22 ஆம் திகதியும் நாவலப் பிட்டி மாவட்ட பொது ஆதார வைத்திய சாலையில் அவர்களது பெற்றோரால் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வயிற்று வலி, வாந்தி மற்றும் தொண்டை வலி போன்ற அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் அவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் மாண வன் ஒருவரின் தந்தை, நாவலப்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப் படையில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு கள் தொடர்பில், அந்தப் பாடசாலையின் அதிபரைத் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அம்முயற்சி கைகூடவில்லை.

---

### கல்முனை வடக்கு...

ஆகியவற்றுடன் 1989 முதல் கடந்த 34 வருடங்களாக கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் இயங்கி வரு கின்றது. அதன் தனித்துவத்தைப் பறிக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படு கின்ற நடவடிக்கைகளை சட்டவிரோத மானவை என அறிவிக்கவும், அது தனியான பிரதேச செயலக அந்தஸ்து மற்றும் கட்டமைப்புடையது என்று உறுதிப்படுத்தவும் உரிய உத்தரவை வழங்குமாறு கோரி, இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையர சனால் இந்த மனு கடந்த ஜனவரியில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்ற விடயம் குறித்து கடந்த ஏப்ரல் மாதத்தில் நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்க இருக்கையில், கடைசி நேரத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸும் இன்னும் ஒருவரும் இந்த வழக்கில் தங்களையும் இடையீட்டு மனுதாரர்களாகச் சேர்க்கும்படி கோரி விண்ணப்பித்தனர். அதன் அடிப்படையில் திரும்பவும் விசாரணைகள் நடைபெற்றன. மனுவை விசாரணைக்கு ஏற்பது என இன்று முடிவு செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் அடிப்படையில் எதிர் மனுதாரர்களான பிரதமரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, கல்முனை பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட எதிர் மனுதாரர்க ளுக்கு அழைப்பாணை வழங்க உத்தர விட்டு வழக்கை எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ.சுமந்திரனும், இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத் தரணி பைசல் முஸ்தபா, சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன ஆகியோரும், அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மனோகர ஜயசிங்கவும் முன்னிலை யாகினர்.

---

### கஞ்சா மூடைகளுடன்...

மூடைகளை மாற்றிக்கொண்டிருந்த கடத்தல்காரர்கள், தமிழக மீனவர் களால் முற்றுகையிடப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி கரையில் இருந்து 3 நோட்டிக் மைல் தொலைவில் வைத்து இந்தியாவின் நாட்டுப் படகில் ஏற்றி வந்து மன்னார் – பேசாலைப் பகுதியில் இருந்து சென்றதாக நம்பப்படும் படகுக்கு இன்று அதிகாலை 6 மூடை கஞ்சாவை மாற்றிக்கொண்டிருந்தமையை அவ தானித்த உள்ளூர் மீனவர்கள் சிலர் படகில் கடத்தல்காரர்களை முற்று கையிட்டு மடக்கிப் பிடிக்க முயன்றுள்ள னர்.

இதன்போது இரு படகுகளும் இரு திசையில் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். இவற்றை ஒளிப்படம் எடுத்த முற்றுகை யாளர்கள் இந்தியப் படகை மடக்கிப் பிடித்தபோதும் இலங்கைப் படகு கஞ்சா வுடன் தப்பியுள்ளது.

தப்பிய இலங்கைப் படகு 40 குதிரை வலு இயந்திரம் பொருத்தியிருந்த மையால் தம்மால் பிடிக்க முடிய வில்லை எனத் தெரிவித்துள்ள தமிழக மீனவர்கள், தம்மால் சிறைப் பிடிக்கப்பட்ட தூத்துக்குடியைச் சேர்ந்த கடத்தல்காரர் களை பொலிஸாரிடம் ஒப்படைத்துள் ளனர்.

---

### வவுனியாவில்...

இன்று காலை இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா ஏ – 9 வீதியில் இருந்து ஹொரவப்பொத்தானை வீதியூடாகக் கோவில்குளம் நோக்கிச் சென்ற பார வூர்தி நகர பள்ளிவாசல் முன்னால் பயணித்துக் கொண்டிருந்த போது நகரப் பகுதியில் இருந்து வந்த சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் சைக்கிளில் பயணித்த வயோ திபர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனியா, நெடுக்குளம் பகுதியைச் சேர்ந்த கும்புகேகெதர முத்துபண்டா (வயது 71) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

### அராலியில் பெண்...

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தைத் தொடர்புகொண்டு வினவியபோது சம்பவம் இடம்பெற்றது உண்மை என்றும், முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்ட பொலிஸார், மேலதிக தகவல்களை வழங்க முடியாது என்று கூறியுள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸார் ஏற்க னவே பல விடயங்களை ஊடகங்களுக்கு வழங்காமல் மறைத்துப் பல அட்டூழியங் களில் ஈடுபட்ட நிலையில் அண்மையில் சித்தங்கேணி இளைஞரையும் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டு எழுந் துள்ளது.

இந்நிலையில், வட்டுக்கோட்டை பொலி ஸார் தொடர்ந்தும் ஊடகங்களுக்குத் தகவல் வழங்க மறுத்து வருகின்றனர்.

---

### கைதி அலெக்ஸ் சாவு...

ஏனையோரைக் கைது செய்யும் வகை யில் சாட்சியினால் கூறப்பட்ட அடையா ளங்களை ஒத்தவர்களை இனம் காண்ப தற்குரிய அடையாள அணிவகுப்பை நடத்த ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

நவம்பர் மாதம் 8ஆம் திகதி வட்டுக் கோட்டைப் பொலிஸாரால் கைது செய் யப்பட்ட இரு சந்தேகநபர்களில் ஒருவரான நாகராசா அலெக்ஸின் மரணம் இயற்கை யானதா அன்றி மனித உயிர்ப்போக்கா எனக் கண்டறியும் விசாரணை இன்றைய தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் றில் நீதிவான் அ.ஆனந்தராஜா முன்னி லையில் இடம்பெற்றது. இதன்போதே நீதிவான் தனது கட்டளையில் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த விசாரணையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இருவர், உயிரிழந்த அலெக்ஸ்/டன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றைய சந்தேகநபர் மற்றும் ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர் ஆகியோருடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையின் சட்ட வைத்திய நிபுணர் ஆகி யோர் சாட்சியமளித்தனர்.

இவற்றின் அடிப்படையில் இடைக்கால கட்டளையிட்ட நீதிவான் இயற்கையானது அல்லாமல் ஏற்படுத்தப்பட்ட மனித உயிர்ப் போக்குக்குக் காரணமானவர்கள் என அவருடன் இருந்த மற்றைய சந்தேக நபரால் பெயர் குறிப்பிட்டு அடையாளம் கூறப்பட்ட மூன்று பொலிஸாரையும் கைது செய்யுமாறும், ஏனையோரைக் கைது செய்யும் வகையில் சாட்சியினால் கூறப்பட்ட அடையாளங்களை ஒத்தவர் களை இனம் காண்பதற்கான அடையாள அணிவகுப்பை நடத்த ஏற்பாட்டை மேற் கொள்ளுமாறும் வடக்கு மாகாண பிர திப் பொலிஸ்மா அதிபருக்கான கட்ட ளையை நீதிமன்றப் பதிவாளரை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

உயிரிழந்தவருடன் உடன் இருந்த மற்றைய சந்தேகநபரும் மூன்றாவது சாட்சியுமானவரைப் பொலிஸார் சில விடயங்களை இனம் காண அழைத் துச் செல்லக் கோருவதனால் இரு சட்டத் தரணிகள் சகிதம் அழைத்துச் செல்லவும் கட்டளையிடப்பட்டது.

இதேநேரம் அந்த மரண விசாரணை வழக்கில் உயிரிழந்தவர் சார்பில் 12 பெண் சட்டத்தரணிகள் உட்பட 36 சட்டத்தரணி கள் இன்று நீதிமன்றில் முன்னிலை யாகினர்.

இன்றைய இந்த வழக்கு விசாரணை யின்போது யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம் முன்பாக வழமைக்கு மாறாக அதிகளவு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.




# திருடர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற கல்விக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

நாட்டின் கல்வித்துறையைப் பலப்படுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசின் முதல் இலக்காக காணப்படுகிறது. திருடர்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு, முதலில் நாம் கல்விக்க முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில் நுட்ப வேலைத் திட்டத்தின் 49 ஆவது கட்டத்தின் கீழ் மத்திய கொழும்பு மகளிர் பாடசாலை ஒன்றின் சிமார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் (22) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அறிவுப் புன்புலமும் கல்வியும் இல்லை என்றால், எந்தக் கேள்விக்கும் வாள், குத்து, தோட்டா, வெடிகுண்டு, பயோனெட், தாக்குதல், துன்புறுத்தல், கொடுமைப்படுத்துதல் என்பவற்றை பதிலாக வழங்கி தங்கள் இருப்பை உறுதி செய்வார்கள்.

எமது எதிர்கால சந்ததியினருக்கு அறிவை மையமாக கொண்ட நாட்டை வழங்கிப் பொருளாதாரத்தையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

பாடசாலைகளில் அரசியல் பேசுவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர. அரசியல் செய்வதற்குப் பெற்றோருக்கு மாத்திரமா உரிமை உள்ளது. அவ்வாறு கூறுபவர்களிடம் வினவ வேண்டியுள்ளது. பெற்றோர் என்ன செய்தார்கள் என்பதை அறிய பாடசாலை பிள்ளைகளுக்கும் உரிமை உண்டு.

நாட்டில் உள்ள ஒவ்வொரு பாடசாலை பிள்ளைகளும் 12-13 லட்சம் கடனாளிகளாக மாறிவிட்டனர். தனிநபர் கடன் 13 லட்சமாக அதிகரிக்க இந்த முதியவர்களே காரணமாக இருந்துள்ளனர்.

பிள்ளைகள் இது குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். எந்தவொரு தகவலையும் சமூக ஊடகங்களுக்குச் சென்று பிறகு பெறலாம் என்று இருந்து விடக் கூடாது.

விவசாயம், கைத்தொழில்,மீன்பிடி போன்ற துறைகளில் பெரியவர்களை விட பாடசாலை பிள்ளைகளுக்கு அதிக அறிவாற்றல் உள்ளது.

எனவே, நாட்டின் பாடசாலை மாணவர் சமூகத்தை முட்டாள்களின் கூட்டம் என்று கருத வேண்டாம்.

வங்குரோத்தான நாட்டின் குடிமக்கள் என்ற முறையில், பாடசாலை மாணவர்களும் உண்மைக்கும் பொய்க்கும், யதார்த்தத்துக்கும் புனைவுக்கும் உள்ள வித்தியாசத்தை அறியும் உரிமை உள்ளது. இந்த உரிமையைத் தடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை.– என்றார்.




# அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தருக்குப் பயிற்சி!

(பழுவூரான்)

அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான முன்னாயத்தப் பயிற்சி பாதுகாப்பு அமைச்சின், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரன் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் பிரதி பணிப்பாளர் டபிள்யூ. எஸ். யூ. பிரவாத் தலைமையில் மாவட்ட செயலக மண்டபத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்றது.

எதிர்வரும் காலங்களில் பருவ பெயர்ச்சி ஆரம்பமாகவுள்ளதால் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான முன்னாயத்த தற்செயல் திட்டத்தைப் புதுப்பித்தல் மற்றும் செயல்படுத்தல் தொடர்பான பயிற்சிநெறி மாவட்ட அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் ஆர். சிவநாதன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியின் வளவாளராக எம். ஏ. டி. என். முத்துகொட மற்றும் வி.பாலரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உரிமைகளை மறுக்கும் தெற்கு

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை விவகாரத்தில் தென்னிலங்கை சிங்களம் எப்படி நடந்து கொள்ளும் என்பதற்கு அரசமைப்புக் கவுன்ஸிலில் ஓர் உறுப்பினர் நியமன விடயத்தில் அது செயற்படும் முறைமை நல்ல உதாரணமாகும்.

அரசமைப்புக் கவுன்ஸிலில் மொத்தம் 10 உறுப்பினர்கள். அதில் ஒருவர் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியின் பிரதிநிதியான எம்.பி. என அரசமைப்பு தெளிவாகத் தெரிவிக்கின்றது. அந்த நியமனம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. அது இல்லாமலேயே ஒன்பது பேருடன் அரசமைப்புக் கவுன்ஸில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் கூட, புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் உட்பட பல விவகாரங்களில் அரசமைப்புக் கவுன்ஸிலில் இழுபறி நிலைமை ஏற்பட்டமை தெரிந்ததுதான். இத்தகைய சந்தர்ப்பத்தில் அந்தப் பத்தாவது உறுப்பினரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகும்.

தமிழர்களுக்குரிய அந்த இடத்தை வழங்காமல், திட்டமிட்டு புறமொதுக்கி நடக்கின்றது இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பு.

இப்போதைய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் முதலாவது பெரிய கட்சி பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சி. அடுத்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி. மூன்றாவது பெரிய கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான்.

எனவே அரசமைப்புக் கவுன்ஸிலில் மூன்றாவது பெரிய கட்சிக்குரிய இடம் தமிழரசுக் கட்சியினுடையதுதான். தமிழரசுக் கட்சி தனது தரப்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பியின் பெயரை இந்த உறுப்பினர் பதவிக்கு பிரேரித்து ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால் அதை ஏற்று அங்கீகரிக்காமல், இழுத்தடித்து வரும் நிலைமை தொடர்கின்றது.

மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட விமல் வீரவன்ஸவும் ஒரு சிலரும் தாங்கள் தனி அணியாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் வரிசையில் போய் அமர்ந்து கொண்டு, அந்த மூன்றாவது பெரிய கட்சிக்குரிய அரசமைப்பு கவுன்ஸில் அங்கத்துவத்தைத் தங்களுக்குத் தர வேண்டும் என்று அடாவடித்தனம் - சண்டப் பிரசண்டம் - பண்ணுகின்றனர்.

சபாநாயகரும் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்காமல், அந்தப் பத்தாவது உறுப்பினருக்குரிய இடத்தை முடிவு செய்யாமல், காலத்தை இழுத்தடித்து வருகிறார்.

மொட்டுக் கட்சியின் சின்னத்தில் - பட்டியலில் - போட்டியிட்டு வென்று நாடாளுமன்றுக்கு வந்தவர்களே விமல் வீரவன்ஸ தரப்பினர். அவர்கள் தங்கள் கட்சியின் எம்.பிக்களே என்றுதான் மொட்டுக் கட்சியின் செயலாளர் எழுத்தில் உறுதிப்படுத்துகின்றார். ஆனால் அவர்களில் கொஞ்சம் பேர் நாடாளுமன்றத்தில் தனியாக அமர்ந்திருக்கின்றார்கள் என்ற கருத்தை வைத்து, மூன்றாவது பெரிய கட்சிக்குரிய பிரதிநிதித்துவத்தை தமிழரசுக்கு வழங்க இலங்கையின் ஜனநாயக கட்டமைப்பு மறுக்கின்றது.

அதுவும் நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை அரசமைப்பு கவுன்ஸில் கையாளும் இந்தச் சமயத்தில் அந்த விவகாரங்களில் தமிழர்களின் பிரதிநிதித்துவப் பங்களிப்பை - உரிமையை - மறுத்து தென்னிலங்கை நடந்து கொள்வதை அப்பட்டமாக வெளிப்படுத்தும் ஒரு விடயம் இது.

அரசமைப்புக் கவுன்ஸிலில் தமிழர் தரப்புக்குரிய சட்டரீதியான உரித்தையே அடித்துப் பறித்து மறுக்கும் இலங்கையின் அதிகாரத் தரப்புகள், தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கு நீதி, நியாயமான தீர்வைத் தரும் என்று எப்படி நம்ப முடியும்?

# இலவச தையல் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(த.சுபேசன்)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு வருட காலத்தைக் கொண்ட இலவச டிப்ளோமா தையல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே ஆர்வமுள்ள விண்ணப்ப தாரிகள் தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் விண் ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொண்டு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரியப்படுத்தியுள்ளார்.

விண்ணப்பித்தவர் களுக்கான நேர்முகத் தேர்வு டிசெம்பர் 13 ஆம்திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்குப் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்."

வங்காரி மாதாய்

(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)







# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாபெரும் சிரமதானப் பணி!

முல்லைத்தீவு மாவட்டத்தில் பருவ மழை பெய்துவரும் நிலையில் பல்வேறு பகுதிகளில் நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கிறது. வடிகான்களில் குப்பைகள்நிறைந்துகாணப்படுகின்றன. வெள்ளநீர்மக்கள்குடியிருப்புக்களுக்குள் செல்வது மாத்திரமின்றி நீர்தேங்கி நின்று நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணியின் வழிகாட்டலில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இந்துபுரம், திருமுறிகண்டி, மாங்குளம், அம்பகாமம், ஒட்டுசுட்டான், காதலியார் சமணங்குளம், பழம்பாசி, ஒதியமலை புளியங்குளம், பேராறு போன்ற கிராமங்களில் சிரமதானம் இடம்பெற்றது.

கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் மேற்பார்வையில் கிராம அமைப்பினர், கிராம மக்கள், பிரதேச சபையினர் இணைந்து இந்தப் பணிகளை முன்னெடுத்தனர்.

கிராமங்களில் உள்ள பொது மண்டபங்கள், முன்பள்ளிகள் போன்ற பொது இடங்களில் சிரமதான பணிகளை முன்னெடுத்தனர். கிராமங்களில் உள்ள நீர் வழிந்தோடும் வடிகால்கள் துப்பரவு செய்யப்பட்டன.

ஏனைய கிராமங்களில் தொடர்ந்து வரும் நாள்களில் சிரமதான பணி முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# விஞ்ஞான ஆராய்ச்சி ஜனாதிபதி விருது; கிழக்குப் பல்கலைக்கு ஆறு விருதுகள்!

(பழுவூரான்)

விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகள் வழங்கும் நிகழ்வு தேசிய ஆராய்ச்சி சபையின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க் கிழமை (21) இடம்பெற்றது.

2019 - 2020 ஆம் ஆண்டு ஆய்வு வெளியீடுகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு தேசிய ஆராய்ச்சி சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக் கழகத்தில் இருந்து விஞ்ஞான ஆய்வுக்கான ஜனாதிபதி விருதைக் கணிதப் பேராசிரியர் எஸ்.திருக்கணேஷ், இயற்பியல் பேராசிரியர் சி.ராகல் மற்றும் முனைவர் ஆர்.என்.நஷீஹா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.




இதன் போது கணிதப் பேராசிரியர் திருக்கணேஷ் இற்கு 2019 இற்கு ஒரு விருதும், 2020 இற்கு 2 விருதுகளும் கிடைக்கப்பெற்றன. பௌதீகவியல் பேராசிரியர் சி.ராகலுக்கு 2019 ஆம், 2020 ஆம் ஆண்டுகளுக்கு தலா ஒவ்வொரு விரு தும் மற்றும் முனைவர் ஆர்.என்.நஷீஹா 2020 இற்கு ஒரு விருதும் கிடைத்துள்ளன.





# நாவற்காடு நாமகள் மாணவிகள் சாதனை!

(பழுவூரான்)

அகில இலங்கை கர்நாடக சங்கீத தேசிய மட்டப் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட நாவற்காடு நாமகள் வித்தியாலய மாணவிகள் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

இதற்கமைய இடைநிலைப் பிரிவில் மு.கதுர்ஸ்ணா என்ற மாணவியும், மேற்பிரிவில் சி.மாதங்கி என்ற மாணவியும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன் ஆகியோர் நேரடியாக பாடசாலைக்கு சென்று பாராட்டிக் கௌரவித்தனர்.

# மத்திய அரசின் கீழ் வரவுள்ளது பொத்துவில் வைத்தியசாலை!

## முன்னாள் எம்.பி. முஷாரப் தெரிவிப்பு

(அபு அலா)

பொத்துவில் ஆதார வைத்தியசாலை மிக விரைவில் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டு பெரியளவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம். எம்.முஷாரப் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நிர்வாகக் கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுற்றுலாத்துறைக்குப் பெயர்போன அருகம்பே பிரதேசம் இங்கு அமைந்திருப்பதால் இவ்வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட வேண்டிய அவசியத்தை ஜனாதிபதியும் வெளிப்படுத்தியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அப்துல் றஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டு புதிய நிர்வாகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

மேலும், இந்த நிகழ்வுக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், ஆளுநரின் அதிகாரிகள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை கோட்டத்துக்கு புதிய பணிப்பாளர் பதவியேற்பு

( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஏ. நசீர் நேற்று முன்தினம் (22) புதன்கிழமை பதவியேற்றார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்வு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா முன்னிலையில் நேற்று முன்தினம் கோட்டக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

சம்மாந்துறை கோட்டக் கல்வி பணிப்பாளராக இருந்து தற்போது சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபராக இருக்கும் எம்.ஜனோபரிடமிருந்து புதிய பணிப்பாளர் நசீர் ஆவணங்களை பொறுப்பேற்றார். சம்பவத் திரட்டு புத்தகத்தில் ஒப்பமிட்டு பாரமெடுத்தார்.




நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, கணக்காளர் சீ.திருப்பிரகாசம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அறபாத் மொகைடீன், திருமதி நிலோபரா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் பூ. பரமதயாளன், உதவி கல்விப் பணிப்பாளர்களான வி.ரி.சகாதேவராஜா, எம்.எம்.எம். ஜௌபர், சித்திர பாட வளவாளர் எஸ்.எல். அப்துல் முனாப், ஆசிரிய ஆலோசகர்களான ரி.எல். றைஸ்டீன், எம்.அன்வர், நிர்வாக உத்தியோகத்தர் முஷரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# தேசிய தொலைக்காட்சியின் ஒத்துழைப்போடு திருகோணமலையில் டெங்கு ஒழிப்புத் திட்டம்!

## அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர்)

தேசிய தொலைக்காட்சியின் பூரண ஒத்துழைப்போடு நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்துடன் இணைந்து திருகோணமலை மாவட்டத்தின் வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நேற்று முன்தினம் (22) மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

தற்போதைய பருவமழையால் நாடு முழுவதும் டெங்கு நோய் பரவும் அபாயம் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக தேசிய தொலைக் காட்சியுடன் இணைந்து டிசெம்பர் (14) ஆம் திகதி டெங்கு தடுப்பு திட்ட நிகழ்ச்சியைநடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இந்த வேலைத் திட்டத்துக்கு முதன்மையான பொறுப்பாகும். மேலும் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு ஆகியன பங்குதாரர்களாகச் செயற்படுகின்றன.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகமுள்ள பிரதேசத்தில் முகாம் ஒன்றை நடத்துவதுடன், 500 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தொற்று நோய் நிபுணர் மற்றும் பூச்சியியல் நிபுணரால் விரிவுரை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், சுற்றுப் புறங்களைச் சுத்தப்படுத்துவதும், டெங்கு அபாயத்தைக் குறைப்பதும் இதன் முதன்மை நோக்கமாகும் என இதன் போது மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், தேசிய தொலைக்காட்சியின் உதவிப் பணிப்பாளர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிப் பணிப்பாளர், கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், திருகோணமலை மாநகர சபை அதிகாரிகள், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் திருகோணமலை மாவட்ட லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# கிழக்கு பட்மின்டன் சங்கத்தின் நிர்வாக தெரிவும், பொதுக்கூட்டமும்

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பட்மின்டன் சங்கத்தின் 2023 - 2027 ஆகிய நான்கு ஆண்டு காலப் பகுதிக்கான தலைவராக கல்வியல் கல்லூரி ஓய்வுபெற்ற உதவி முதல்வர் எம்.எச்.எம். மன்சூர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண பட்மின்டன் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தேர்தலும் சாய்ந்தமருது தனியார் விடுதி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

நிர்வாகசபையின் பிரதித் தலைவராக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.எம். இப்ராஹிம், உப தலைவர்களாக மட்டக்களப்பு மாவட்ட பட்மின்டன் சங்கத்தின் தலைவர் எஸ். ராஜேந்திரன், அம்பாறை மாவட்ட வெட்மிண்டன் சங்கத்தின் உப தலைவர் எம்.ஏ.எஸ். பி. முனசிங்க, கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ஏ.எம். அன்ஸார், சம்மாந்துறை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எல். சுலக்சன், ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஏ. எட்வார்ட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொதுச் செயலாளராக இலங்கை பட்மின்டன் சங்கத்தின் உப தலைவர் ஆசிரியர் அலியார் பைஸர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் பொருளாளராக தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் கே. சுரேஸ், பிரதி செயலாளராக காத்தான்குடி மத்திய கல்லூரி விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.ஆர்.எம். சஜானும், உதவிசெயலாளராகஅட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலய ஆசிரியர் ஜெ. பஸ்மீரும், பிரதி பொருளாளராக மூதூர் முஸ்லிம் மத்திய கல்லூரி ஆசிரியர் ஏ.எச்.வை. அரபாத்தும், உதவி பொருளாளராக அம்பாறை மாவட்ட பட்மின்டன் சங்கத்தின் உப தலைவர் நிமால் அபேவிக்ரமவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கணக்கு பரிசோதகர்களாக சம்மாந்துறை கோரக்கர் மகா வித்தியாலய விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே.எல். எம். சக்கி மற்றும் லங்கா ஐ.ஓ.சி. கல்முனை முகாமையாளர் ஈ.எம். நௌஸர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சட்ட ஆலோசகர்களாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான கிழக்கு மாகாண பட்மின்டன் சங்கத்தின் முன்னாள் தலைவர் வி. வினோபா இந்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் ஆகியோர் சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர்.

# விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது வைத்தியகலாநிதி கோபிசங்கருக்குக் கிடைத்தது




விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது வைத்திய கலாநிதி டி.கோபிசங்கருக்கு வழங்கப்பட்டது.

விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகள் விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது "வடக்கு மாகாணத்தில் ஏற்படும் விபத்துக்கள்" பற்றி 2020 ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைக்காகவே விருது வழங்கப்பட்டது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழிநுட்பவியலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய ஆராய்ச்சி சபையால் வருடாந்தம் இவ்விருது விழா ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் உதவி!

(எஸ்.கீதபொன்கலன்)

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று (21) வெருகல் பிரதேச செயலர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்றது.

வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நெய்த்தீவு, இலங்கைத்துறை முகத்துவாரம் மற்றும் வெருகல் முகத்துவாரம் கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 735 பயனாளிகளுக்கும் தலா 20 கிலோ துவரம் பருப்பு மற்றும் 5 லீற்றர் சமை யல் எண்ணெய் என்பன வழங்கப்பட்டன.



# தேசிய பாடசாலைகளின் விவாதப் போட்டி மட்டுவில்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு தேர்தல் திணைக்களம் மட்டக்களப்பில் உள்ள தேசிய பாடசாலை மாணவர்களிடையே மாவட்ட மட்ட விவாதப் போட்டிகளை நடத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் எம்.வீ.எம். சுபியானின் வழிகாட்டல் மற்றும் தலைமையில் இடம்பெற்ற விவாதப் போட்டியில் 14 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதில் முதலாம் இடத்தை மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட சிசிலியா தேசிய பெண்கள் கல்லூரியின் விவாத அணியினர் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியானது தேர்தல் மற்றும் ஜனநாயகம் போன்ற கருப்பொருட்களை மையமாக கொண்டு இடம்பெற்றிருந்தது.

இப்போட்டி நிகழ்வின் நடுவர்களாக கதிரவன் த.இன்பராசா உள்ளிட்ட நடுவர்கள் குழாத்தினர் கடமையாற்றினர்.





# நூலக நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

திருகோணமலை நகர சபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக நடமாடும் சேவை திருகோணமலை அன்புவழிபுரம் நூலக மண்டபத்தில் நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் என் . பரமேஸ்வரன் , நூலகர் மு.லெ. நிம்சான , அன்பு சன சமூக நிலையத்தின் பொறுப்பாளர்கள், நூலக உதவியாளர்கள் கலந்து கொண்டனர். நடமாடும் சேவையில் நூலக கண்காட்சியும் இடம் பெற்றது.

# லஞ்சம், ஊழலை ஒழிப்பது தொடர்பில் பயிற்சிப் பட்டறை களுவாஞ்சிக்குடியில்!

(விரி.சகாதேவராஜா)

நேர்மையான இலங்கை எனும் தொனிப்பொருளின் கீழ் லஞ்சம் மற்றும் ஊழலை இல்லாது ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பு எமக்குத் தேவையான வளங்களை பயன்படுத்திவிட்டு எஞ்சிய வளங்களை எதிர்கால தலை முறைக்காக பாதுகாத்து வைப்பதேயாகும்.

இந்த நோக்கை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வரும் பயிற்சிநெறியில், லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விளக்கம் மற்றும் சட்ட ஏற்பாடுகள், அவற்றால் ஏற்படும் பாதக விளைவுகள் என்பன தொடர்பாக வளவாளர்களான பிரதேச செயலர் மற்றும் உதவி பிரதேச செயலர் ஆகியோர் விளக்கமளித்தனர்.



அரச நிறுவனங்களில் இடம்பெறும் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக சம்பவக் கற்கைகள் மூலமும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

இந்த செயலமர்வானது பிரதேச அலுவலக உத்தியோகத்தர்களுக்கு பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்றது.

# ஓவியச் சாதனையாளர் கௌரவிப்பு

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கிழக்கு மாகாண மட்ட சிறுவர் சித்திரப் போட்டியில் சாதனை புரிந்த மாணவர்களை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா பாடசாலைக்கு சென்று பாராட்டினார்.



இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் இருந்து மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற ஏ.எம். பாத்திமா நுஸைபா மற்றும் மூன்றாவது இடத்தைப் பெற்ற எம்.கே. யூசுப் ஸயான் ஆகியோருக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. அப்துல் மஜீத், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான மஹ்மூத் லெவ்வை, பூ. பரமதயாளன், ஏ.நசீர், உதவி கல்விப் பணிப்பாளர்களான வி.ரி. சகாதேவராஜா, எம். எம். எம்.ஜௌபர் சித்திர பாட வளவாளர் எஸ்.எல். அப்துல் முனாப், அதிபர் எம்.ஐ. மாஹிர், பிரதி அதிபர் ஹிதாயா மீராலெவ்வை, உதவி அதிபர் ஏ. எம்.எஸ். இர்பானா ஆகியோர் கலந்து கொண்டனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST
FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882





# குழந்தைகள் பராமரிப்பு நிலையம் மட்டக்களப்பில் திறந்து வைப்பு!

(பழுவூரான்)

ஆஸ்திரேலியத் தூதரக முதல்தர செயலாளர் சோபியா வில்கின்சனால் மட்டக்களப்பில் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் செவ்வாய்க்கிழமை (21) திறந்து வைக்கப்பட்டது.

சென் மேரிஸ் மோன்டேசரி ஹவுஸ் குழந்தைகள் பராமரிப்பு நிலையப் பொறுப்பதிகாரி திருமதி ரஜினி பிரான்சிஸ் தலைமையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில், சர்வோதய நிறுவனத்தின் தலைவர் வின்யா ஆரியரத்ன, கொமர்சல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சனத் மானதுங்க, சர்வ தேச நிதி நிறுவனத்தின் இலங்கைக் கான முகாமையாளர் அலிஜன்ரொ, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் நிமாலி எஸ்குமாரி (சர்வோதயம்), மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் (சர்வோதயம்) வேனுஸ்ரீ புவனேந்திர ராஜா உள்ளிட்ட சர்வோதயம் மற்றும் சென் மேரிஸ் மோன்டேசரி ஹவுஸ் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது பராமரிப்பு நிலையம் அதிதிகளால் நாடா வெட்டி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. சிறார்களின் கண்கவர் நடனம் மற்றும் பாடல்கள் என்பன நிகழ்வை அலங்கரித்தன. சிறார்களால் அதிதிகளுக்கு அன்பளிப்புகளும் வழங்கப் பட்டன.

# பாலியல் லஞ்சம் கோரினார்; பொலிஸ் அதிகாரிக்கு மறியல்!

குடும்ப பெண்ணிடம் பாலியல் லஞ்சம் கோரித் தொந்தரவு செய்த 58 வயதுடைய உப பொலிஸ் பரிசோதகரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி த. கருணாகரன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை (22) அன்று கொழும்பில் இருந்து வந்த லஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் மாறுவேடத்தில் சென்று கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவினுள் உள்ள தனியார் விடுதியில் வைத்து அந்த உப பொலிஸ் பரிசோதகரை குடும்பப் பெண்ணுடன் கைது செய்திருந்தனர்.

குற்றச்செயல் ஒன்றுக்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட குடும்ப பெண்ணை (வயது-33) நீதிமன்ற பிணை நிபந்தனையான, மாதம் ஒரு முறை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து வைப்பதில் இருந்து தவிர்ப்பதற்காக, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை சேர்ந்த 59 வயதுடைய உப பொலிஸ் பரிசோதகர் பாலியல் லஞ்சம் கோரி தொந்தரவு செய்து வந்துள்ளார்.

இதனையடுத்து அந்தக் குடும்பப் பெண் உரிய தரப்பினரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார். தொடர்ந்து லஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் வழிகாட்டலில் கல்முனை கடற்கரை பகுதியிலுள்ள விடுதிக்கு அந்த பொலிஸாருடன் பெண் சென்றுள்ளார். இதேவேளை மாறுவேடத்தில் அங்கு சென்ற லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர், குடும்ப பெண்ணுடன் அரை நிர்வாணமாக இருந்த நிலையில் உப பொலிஸ் பரிசோதகரைக் கைது செய்துள்ளனர்.

அந்தப் பெண்ணுடன் தொலைபேசி வாயிலாக 8 தடவைக்கு மேலாக தொடர்பு கொண்டு உப பொலிஸ் பரிசோதகர் பாலியல் லஞ்சம் கோரியுள்ளமை அறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரை, விசாரணையின் பின்னர் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.கருணாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதன்போது எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை 14 நாள்கள் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் வெளியீடு!

ஜீவநதி பதிப்பகத்தின் 299 ஆவது வெளியீடாக ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய "பாலஸ்தீனம் - எரியும் தேசம்" எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியாகியுள்ளது.

இந்த நூலில் நிகழ்கால பாலஸ்தீன போர்க்கள நிகழ்வுகளின் ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

'ஜீவநதி' பதிப்பகத்தால் வெளியான இந்த நூலில் நூறாண்டுகளாக தொடரும் துயரத்தை சுமந்த எரிகின்ற பாலஸ்தீன தேசம் பற்றிய வரலாற்றுப் பார்வையில் கட்டுரைகள் இந்த நூலில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.




ஈழத்து இலக்கிய உலகில் நீண்ட காலம் அறிமுகமான ஐங்கரன் விக்கினேஸ்வரா நீண்ட காலமாக சர்வ தேச அரசியல் விவகார ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருபவர். சார்ள்ஸ், நவீனன் எனும் புனை பெயர்களாலும் அறியப்பட்ட இவரது படைப்புகள் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளன.

தற்போது வெளியாகியுள்ள 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' கட்டுரைத் தொகுப்பு நூலானது பாலஸ்தீன மக்கள் மிகவும் நெருக்கடியான காலத்தில் இனப்படுகொலை ஒன்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் காலத்தில் வெளியாகியுள்ளது.

# டில்லியில் உள்ள தூதரகத்தை நிரந்தரமாக மூடுகிறோம்!

## -ஆப்கானிஸ்தான் அறிவிப்பு



இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான சவால்கள் காரணமாக டில்லியில் உள்ள தூதரகத்தை நிரந்தரமாக மூடுகிறோம் என ஆப்கானிஸ்தான் இன்று அறிவித்துள்ளது.

டில்லியிலுள்ள தூதரகத்தை மூடுவது தொடர்பாக ஆப்கன் தூதரகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில்,

“இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான சவால்கள் காரணமாக டில்லியில் உள்ள ஆப்கன் தூதரகம் நிரந்தரமாக மூடப்படுகிறது. இந்த நடவடிக்கை நவம்பர் 23 ஆம் திகதி முதல் (இன்று) அமுலுக்கு வருகிறது. கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி தூதரகத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதைத் தொடந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிலைப்பாடு மாறி, பணிகளைச் சாதாரணமாக செய்யும் அளவுக்கு நிலைமை இயல்பானதாக மாறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை சிலர் உள் முரண்பாடு மற்றும் தூதர்கள் தாலிபன்களுக்கு ஆதரவாக மாறிவிட்டார்கள் என்று முத்திரைக் குத்த முயற்சிக்கலாம். ஆனால் இந்த நடவடிக்கை முழுக்க முழுக்க கொள்கைகள் மற்றும் நலன்களின் பரந்த மாற்றங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டது.

எங்களின் பணிக்காலம் முழுவதும், இந்தியாவில் உள்ள ஆப்கன் மக்கள் வழங்கிய ஆதரவுக்கும் புரிதலுக்கும் தூதரகம் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. வளங்கள் மற்றும் அதிகாரத்தில் வரம்புகள் இருந்த நிலையில் காபூலில் ஒரு நிலையான அரசாங்கம் இல்லாத போதிலும் தூதரகம் அவர்களின் நலன்களுக்காக செயல்பட்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நவம்பர் 1 ஆம் திகதி முதல் இந்தியாவுடனான அனைத்து தூதரக நடவடிக்கைகளையும் நிறுத்துவதாக அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருந்தது. அதில், “ஆழ்ந்த வருத்தத்துடனும், சோகத்துடனும், ஏமாற்றத்துடனும் புதுடில்லியில் உள்ள ஆப்கன் தூதரகம் அதன் அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்துகிறது” என்று கூறப்பட்டிருந்தது.

## உத்தராகண்ட் சுரங்க விபத்து:

# தொழில்நுட்ப கோளாறு காரணமாக மீட்பு பணியில் மீண்டும் தாமதம்!



உத்தரகாசி சுரங்கத்துக்குள் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில், இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக நேற்று இரவு துளையிடும் பணிகள் நிறுத்தப்பட்டதால் மீட்பு பணிகளில் மீண்டும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

உத்தராகண்ட் மாநிலம் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக சில்க்யாரா- பர்கோட் இடையே 4.5 கிலோ மீற்றர் தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி இந்த சுரங்கப் பாதையில் மண் சரிந்தது. இதன் காரணமாக சுரங்கப் பாதைக்குள் 41 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் கடந்த 12 நாட்களாக பல்வேறு சிக்கல்களுக்கு நடுவில் மிகவும் தீவிரமாக நடந்து வருகிறது. சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்களைத் தொட்டு விடும் தூரத்தில் மீட்பு குழுவினர் 46.8 மீற்றர் தூரம் துளையிட்டிருந்த நேரத்தில் ஆஜர் துளையிடும் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டது. இதனால் நேற்று இரவு மீட்பு பணிகள் நிறுத்தப்பட்டன.

இதுகுறித்து கருத்து தெரிவித்த உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, அமெரிக்க ஆஜர் இயந்திரம் நேற்று வியாழக்கிழமை பழுதானதால் பின்னிரவில் துளையிடும் பணிகள் நிறுத்தப்பட்டன என்றார்.

மேலும், விபத்து ஏற்பட்ட இடத்தில் இரவு முழுவதும் முதல்வர் தங்கியிருந்தார். இதனிடையே சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்களுடன் தொடர்பு கொள்வதற்காக மினி ட்ரோன்கள் மற்றும் ரோபோக்களை பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே, துளையிடும் பணிகளுக்கு மத்தியில் ஆஜர் இயந்திரம் வியாழக்கிழமை பழுதடைந்ததால் மீட்பு பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பழுது சரிசெய்த பின்னர் பணிகள் இன்று மீண்டும் தொடரும் என்று சர்வதேச சுரங்க நிபுணர் அர்னால்ட் டிக்ஸ் தெரிவித்துள்ளார்.

இதனால், சில்க்யாரா சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்களை மீட்கும் பணி இன்று வெள்ளிக்கிழமை 13 ஆவது நாளை எட்டியுள்ளது.

# பணயக் கைதிகள் 13 பேர் இன்று விடுவிக்கப்படுகின்றனர்!



ஹமாஸ் பணயக் கைதிகளாக தடுத்து வைத்துள்ளவர்களில் 13 பேரை இன்றைய தினம் விடுவிக்கவுள்ளதாக கட்டார் தெரிவித்துள்ளது.

பணயக் கைதிகளை விடுவிப்பதற்கும், பாலஸ்தீனியர்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கும் நான்கு நாட்கள் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் இணங்கியதன் அடிப் படையில், விடுவிக்கப்படவுள்ள 50 பணயக்கைதிகளில் முதல் கட்டமாக 13 பணயக் கைதிகள் இன்றைய தினம் விடுவிக்கப்படுவார்கள் என கட்டார் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய சிறைச்சாலைகளில் 150 பாலஸ்தீனியர்கள் தடுத்து வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளிலுள்ள ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இஸ்ரேல் பிரதமர் உத்தரவு

வெளிநாடுகளில் உள்ள ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்குமாறு இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட்டிற்கு இஸ்ரேல் பிரதமர் நேதன்யாஹு உத்தர விட் டுள்ளார்.

ஹமாஸ் அமைப்பை முழுமையாக அழிக்கும்வரை போர் தொடரும் எனவும் அவர் திட்டவட்டமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் யூதர்களுக்கு எதிராக செயற்பட்ட ஹிட்லரின் நாசிப்படை தளபதிகள், ஈரான் நாட்டு அணுசக்தி விஞ்ஞானிகள், பாலஸ்தீன தலைவர்கள் என பலரை வெளிநாடுகளில் வைத்து மொஸாட் உளவாளிகள் கொலை செய்ததாக குற்றச்சாட்டுகள் உள்ளன.



இந்த நிலையில் ஹாமாஸ் தலைவர்கள் பலர் கட்டார், லெபனான் போன்ற நாடுகளில் இருந்தபடி இயங்கி வருவதாகவும் அவர்களை கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் நேதன்யாஹு உத்தர விட்டுள்ளார்.

# அயர்லாந்து தலைநகரில் தாக்குதல்: சிறுவர்கள் படுகாயம்




அயர்லாந்தின் டப்ளின் ஆரம்ப பாடசாலை அருகே மர்ம நபர் கத்தியால் தாக்கிய சம்பவத்தில் மூன்று சிறார்கள் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

இதில் சிறுமி ஒருவரும் பெண் ஒருவரும் ஆபத்தான நிலையில் மீட்கப்பட் டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த அவசர மருத்துவ உதவிக் குழுவினர் மற்றும் பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டுள்ளதுடன், சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர்.

காயமடைந்துள்ள ஐவரும் டப்ளின் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு வைத் தியசாலைகளுக்கு கொண்டு செல் லப்பட்டுள்ளனர்.